


## பாடம் 5 பிலேயாம் - குறி சொல்லுகிறவனாய் மாறின தீர்க்கதரிசி

### வேதப்பகுதி

எண்ணாகமம் 22 முதல் 25 வரை

### பயிற்றுவிக்கவேண்டிய குறிப்புகள்

- தீர்க்கதரிசியாகிய பிலேயாம்
- மோவாப் தேசம்
- மோவாப் தேசத்தின் ராஜாவாகிய பாலாக்
- மோவாபிற்கு சென்ற பிலேயாம்
- பிலேயாமிடம் பேசின கழுதை
- ஆசீர்வாதங்களை உரைத்த பிலேயாம்
- இஸ்ரவேல் ஜனங்களை இடறப்பண்ணின பிலேயாம்
- குறிசொல்லுகிறவனாய் மாறின பிலேயாம்
- ஆவிகளை சோதித்தறிதல்


நாம் எல்லா ஆவிகளையும் தேவனுடைய பரிசுத்த ஆவி என்று எண்ணாமல் அவைகளை சோதித்தறிய வேண்டும் என்று பரிசுத்த வேதாகமம் நம்மை எச்சரிக்கிறது. தீர்க்கதரிசி என்பவன் தேவனால் ஏற்படுத்தப்படுபவன். தீர்க்கதரிசன வரம் என்பது தேவனால் கொடுப்படும் ஒரு வரமாகும். எந்த ஒரு மனிதனாலும் இன்னொருவரை தீர்க்கதரிசியாக ஏற்படுத்த முடியாது. தீர்க்கதரிசன வித்தையை எந்த ஒரு தீர்க்கதரிசன பள்ளியிலும் சென்று கற்றுக் கொள்ளவும் இயலாது. ஆகவே நாம் ஜாக்கிரதை உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.


copyright @ 2024

சில வேளைகளில் நல்ல தேவனுடைய தீர்க்கதரிசிகளாய் தங்களுடைய ஊழியத்தை ஆரம்பிப்பவர்களும், பின்னாட்களில் வழிமாறி பிலேயாமைப் போல குறிசொல்லுகிறவர்களாய் மாறுவதுண்டு. தேவனுடைய உண்மையான தீர்க்கதரிகள் தேவனுடைய ஜனங்களின் ஆவிக்குரிய வாழ்க்கையில் கரிசனை உள்ளவர்களாய், அவர்களை நித்திய ஜீவனுக்கு நடத்துகிறவர்களாய் இருப்பார்கள். ஆனால் கள்ள தீர்க்கதரிசிகளோ ஜனங்களை மாம்ச இச்சையை நிறைவேற்றும்படியாக நடத்தி, இம்மைக்குரிய ஆசீர்வாதங்களையே மிகைப்படுத்தி பேசுவார்கள். ஆகவே நாம் ஏமாற்றப்படாதபடிக்கு பிலேயாமின் வாழ்க்கை நமக்கு ஒரு பாடமாக அமைகிறது.

## மனப்பாட வசனம்

*மத்தேயு 7:15,16 கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.*
*அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா?*



## கோடிட்ட இடத்தை நிரப்பவும்

1. பிலேயாம் வழியில் செல்லும்போது ...................... அவனுக்கு எதிர்ப்பட்டார்.

2. கழுதை தூதனிடமிருந்து பிலேயாமை காப்பாற்றுவதற்காக, ...................... முறை வழியை விட்டு விலகி சென்றது.

3. இஸ்ரவேல் ஜனங்கள் மோவாபியருடைய தெய்வமாகிய .................................. வழிபடத் தொடங்கினார்கள்.

4. பிலேயாம் தேவனுடைய தீர்க்கதரிசியாக தன் வாழ்க்கையை ஆரம்பித்து ..................................... தன்னுடைய வாழ்க்கையை முடித்தான்.

 copyright @ 2024

## ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் பதிலளிக்கவும்

1. பாலாக் ராஜா எதற்காக பிலேயாமை அழைத்தனுப்பினான்?

2. பிலேயாமின் கழுதை ஏன் பேசினது?

3. பிலேயாம் இஸ்ரவேல் ஜனங்களை ஏன் சபிக்கவில்லை?

4. பிலேயாமிற்கு பாலாக்கிடத்தில் இருந்து குறிசொல்லுதலுக்கான கூலி கிடைத்ததா? ஏன்?

## கீழ்கண்ட கேள்விக்கு குறுகிய பதிலளிக்கவும்

1. பிலேயாம் இஸ்ரவேலரை எவ்வாறு இடறப் பண்ணினான்?




copyright @ 2024